**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.380/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.4 |
| Name | : | மணி |
| Father's Name/Husband Name: | | மாணிக்கம் |
| Village | : | பெரம்பலூர் |
| Taluk | : | பெரம்பலூர் |
| Age | : | 38 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.06.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி செல்லமுத்து ஆஜர் இல்லை. அவருக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பிரியாவை எனக்கு தெரியும். அவர் எனது உறவினர். எதிரி செல்லமுத்து எனக்கு தெரியும். கடந்த 24.09.2024ம் தேதி பிரியாவின் பக்க்கத்து காட்டில் நானும் எனது மனைவியும் வேலை செய்து கொண்டிருந்தோம், அப்போது மாலை 4.30ல் இருந்து 05.00 மணியளவில் பிரியா எனது மனைவிக்கு போன் செய்து எதிரி செல்லமுத்து அவருடைய கையை பிடித்து இழுத்து பலவந்தப்படித்தனார் என்று கூறினார். அது குறித்து கேட்க நானும் எனது மனைவியும் எதிரி செல்லமுத்துவின் வீட்டிற்கு சென்றோம் அப்போது ஏற்கனவே அங்கு ராமராஜீம் செல்வகுமாரும் எதிரி செல்லமுத்துவிடம் மேற்கண்ட சம்பவம் குறித்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். மேற்கண்ட சம்பவத்தை மறுத்து பின்பு ஒத்துக் கொண்டு அப்போது எதிரி செல்லமுத்து கையில் வைத்திருந்த சின்ன கத்தி மற்றும் இரும்பு

கம்பி ஆகிய ஆயுதங்களை கையில் எடுத்துக் கொண்டு உன்னால் என்ன செய்ய முடியும் என்று கூறி அங்கிருந்த எங்கள் அனைவரையும் மிரட்டினார். பிறகு நாங்கள் அ.சா.1 பிரியாவுடன் புகார் கொடுக்க காவல் நிலையத்திற்கு சென்றோம் அந்த நேரத்தில் எதிரி செல்லமுத்து பிரியாவின் வீட்டிற்கு சென்று வயதான பிரியாவின் அம்மாவை மிரட்டியிருக்கிறார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

பிரியாவின் காட்டிற்கு அருகே உள்ள காட்டில் நான் எத்தனை மணிக்கு அங்கு சென்றேன் என்றால் காலை 11 மணிக்கு. மேற்கண்ட சங்கதிகளை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் அவர்களும் கேட்கவில்லை நானும் சொல்லவில்லை. அ.சா.1 பிரியாவின் காட்டிற்கும் நான் வேலை செய்யும் காட்டிற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 500 மீட்டர் இருக்கும். அ.சா.1 பிரியா சொன்ன சங்கதிகள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சம்பவத்தை நான் கேள்வி தான் பட்டேன் என்றாலும் சரிதான். அ.சா.1 புகார்தாரர் எத்தனை மணிக்கு என் மனைவிக்கு போன் செய்தார் என்றால் மாலை 4.30லிருந்து 5 மணியிருக்கும். செல்லமுத்து வீட்டிற்கு சென்று நாங்கள் சம்பவம் குறித்து கேட்கும் போது எதிரி செல்லமுத்து எங்களை மிரட்டியது குறித்து தனியாக ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். எதிரி செல்லமுத்து கம்பி வைத்து எங்களை மிரட்டியதை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நாங்கள் எதிரி செல்லமுத்து வீட்டிற்கு போவதற்கு முன்பே அங்கு காமராஜ் மற்றும் செல்வக்குமார் ஆகியோர் எதிரி செல்வகுமாருடன் செய்த உரையாடல்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். பிரியாவின் காட்டில் எத்தனை நபர்கள் ஆடு மாடு மேய்த்துக் கொண்டிருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. செல்லமுத்து வீட்டிற்கு நாங்கள் செல்லும் போது அங்கு ஊர்க்காரர்கள் மற்றும் பக்கத்து வீட்டுக்காரர்கள் யார் இருந்தார்கள் என்றால் யாருமில்லை. பிரியா எனது நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் பிரியா எனது உறவினர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி ராமராஜ் என்பவர் எதிரி

செல்லமுத்துவிடம் சம்பவம் குறித்து கேட்கும் போது மணி என்பவர் அங்கு இல்லை என்று சொல்லியுள்ளார் என்றால் அது தவறு.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.